# ஒரு தரகு வியாபாரியின் வெற்றிக்கதை : (டி.பழனியப்பா முதலியார் சன் - வெங்காய கமிஷன் மண்டி)

ஏ. சந்திரசேகரன்,
இ- 107, பெரியார் காய்கறி சந்தை,
கோம்பேடு, சென்னை -600092.
தொலைபேசி: 9444943366.



---

எம். எஸ்ஸி (கணிதம்) நியு காலேஜ் சென்னையில் முடிந்தவுடன் தோல் தொழிற்சாலை அல்லது ஜவுளி தொழிற்சாலை தொடங்கி வணிகத்தை மேற்கொள்ளுவது எனது நோக்கமாக இருந்தது. ஆனால் நான் எனது குடும்ப தொழிலான சிறியவெங்காயம் வியாபாரத்தை தொடர்ந்தேன். இது தொடர்ந்து மூன்று தலைமுறைகளாக 1930ல் இருந்து நடைபெறுகிறது. எனது தாத்தா அனைத்து காய்கறிகளையும் மொத்த வியாபாரம் மற்றும் சில்லரை வியாபாரம் செய்துவந்தார். மேலும் எனது அப்பா கொத்தவால்சாவடி பாரிஸ் சந்தையில் சிறிய வெங்காயம் வியாபாரத்தில் மட்டும் கவனத்தை செலுத்தினார். நாங்கள் பாரிஸ் சந்தையில் சிறிய வெங்காயம் விற்பனையில் முன்னனி தரகர்களாக இருந்தோம். ஆனால் கோயம்பேடு சந்தையில் நாங்கள் நிறைய போட்டிகளை சந்திக்க வேண்டியிருந்தது.

1990ம் ஆண்டு நான் வியாபாரத்தில் இறங்கினேன். கடந்த 19ம் ஆண்டுகளாக தொடர்ந்து கவனித்து வருகிறேன். எனது விடுமுறை நாட்களில் அப்பாவிற்கு உதவியாக வியாபாரத்தை கவனிப்பதுண்டு இதன் மூலமாகவே நான் வியாபாரத்தை கற்றுக் கொண்டேன். இதனால் வியாபாரத்தைப் பற்றிய நடைமுறை அறிவு எனக்கு இல்லாமல் இருந்தது. நான் நிறைய வேவ்வேறு பிரச்சனைகளை சந்தித்து அவற்றை கடந்து இப்பொழுது நான் ஒரு வெற்றிகரமான தொழில் முனைவோராக உள்ளேன்.

நான் தொழிலில் இறங்கியவுடன் எனது பணிகளை கணினிமயமாக்கினேன். இதன் மூலம் மனித வேலைகளை சார்ந்து இருக்கும் பணிகளை குறைத்தேன். கடந்த ஒரு வருடங்களுக்கு முன் (DMI) தினசரி சந்தை நிலவரத்தை பற்றி

அறிந்தேன். எங்களிடம் உள்ள இணைய தளவசதி மூலமாக ஐந்து சந்தைகளின் விலை நிலவரங்களை அறிய முடிந்தது. தற்பொழுது இது மேம்படுத்தப்பட்டு கைபேசி சேவை வசதிகளையும் கொண்டுள்ளது. இது மேலும் உபயோகமானதாக உள்ளது அனைத்து சந்தைகளின் சரியான விலையை அறிந்து கொள்ள முடிகிறது. இது இத்தகைய வியாபாரத்தில் உள்ள அனைவருக்கும் உபயோகமான ஒன்று.

நான் பெரும்பாலும் திருச்சி மற்றும் கோவை மாவட்ட சந்தை நிலவரங்கலுடன் தொடர்பு கொண்டுள்ளேன். கடந்த வருடம் சந்தை நிலவரங்களுக்காக நான் மனிதர்களை சார்ந்து இருந்தேன். ஆனால் கடந்த ஒரு வருடமாக நான் இணையதள வசதி மூலம் சந்தை தகவல்களை பெற்றுவருகிறேன். இந்திய முன்னேற்றத்திற்கான நுழைவாயில் தளம் முக்கிய கொள்முதல் நிலையங்களின் தினசரி விலை நிலவரங்களை தொகுத்து வளங்குகிறது. இதற்கென தகவல் தளங்களையும் கொண்டுள்ளது. தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் தமிழ்நாட்டில் உள்ள முக்கிய மையங்களில் இருந்து தொகுத்து வழங்கப்படும். விலை நிலவரமானது நம்பகரமானதாகவும், உபயோகமானதாகவும் உள்ளது. இது விலை நிலவரங்களை புரிந்து கொள்ள மேலும் உதவிகரமானதாக உள்ளது. மேலும் இதேபோல் சென்னை சந்தைக்கும் உதவுகிறது.

வியாபார நடவடிக்கைகளில் சந்தையின், எங்களின் பொருள்களுக்கு விலையை மதிப்பீடு செய்வது கடினமான பணி. தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் தினசரி சந்தை நிலவரத்தின்(DMI) மூலம் இது எளிமையாகிறது. இந்த விலை நிலவரங்கள் பல்வேறு சந்தையிலிருந்து பெறப்படுகிறது. இதனால் தமிழ்நாட்டின் பல்வேறு சந்தைகளின் விலை நிலவரங்களை அறிய உதவுகிறது. அனைவரின் நலன்களுக்காகவும் இந்த சேவை தொடர வேண்டுமென்று நான் விரும்புகிறேன்.